தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம்

TAMIL NADU FOREST UNIFORMED SERVICES RECRUITMENT COMMITTEE

8வது கீழ் தளம், எண்.01 ஜீனிஸ் சாலை, பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை–600 015.

8th Down Floor, No.01, Jeenis Road, Panagal Maaligai, Saidapet, Chennai - 600 015.

Phone No. / தொலைபேசி எண். 044-2434 1251

**Website :** www.forests.tn.gov.in

## வனக்காவலர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்புதல்

(விளம்பர எண். 1/2019, நாள்: 07.03.2019 மற்றும் அறிவிக்கை எண்.1)

***

## வினாத்தாள் / கேள்வி மற்றும் விடை சவால் செய்வதற்கான திரை வெளியிடுதல் :–

தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம் 06.10.2019–ம் தேதியன்று வனக்காவலர் பதவிக்கான கேள்வி–விடை சவாலுக்கான வழிமுறைகளை வெளியிட்டது. திருத்தப்பட்ட வழிமுறைகள் மற்றும் அட்டவணை கீழ்க்கண்டவாறு விரிவாக கொடுக்கப் பட்டுள்ளன.

1. வனக்காவலர் பதவிக்கான இணையவழித் தேர்வுகள் 04.10.2019 முதல் 06.10.2019 வரை நடைபெற்றது.

2. இணையவழித் தேர்வெழுதிய விண்ணப்பதாரர்கள் www.forests.tn.gov.in என்ற இணையதளம் மூலம் உள்நுழைந்து, வினாவாரியாக விண்ணப்பதாரர்களால் அளிக்கப்பட்ட பதில்களையும் கேள்விக்கான சரியான பதில்களையும் காணலாம். விண்ணப்பதாரர்கள் ஏதேனும் தவறைக் கண்டறியும் பட்சத்தில் www.forests.tn.gov.in என்ற இணையதளம் மூலம் உள்நுழைந்து முறையிடலாம்.

3. **வினாத்தாள் / கேள்வி மற்றும் விடை சவால் செய்வதற்கான திரை 18.10.2019 (காலை 10.00 மணி) முதல் 20.10.2019 (காலை 10.00 மணி) வரை செயலில் இருக்கும்.**

4. விடை சவாலை இணையவழி மூலம் மட்டுமே மேற்கொள்ள முடியும்.

5. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு விடைக்கான சவாலுக்கும் இணையவழி கட்டண நுழைவாயில் (Online payment gateway) மூலம் ரூ.500/– (+ அனுமதிக்கப்பட்ட சேவை வரி) செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

6. விண்ணப்பதாரர்களின் விடை சவால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், மேலே குறிப்பிடப்பட்ட விடை ஒன்றுக்கான ரூ.500/– இணையவழி முறையில் (Online Mode) திரும்ப செலுத்தப்படும்.

7. விண்ணப்பதாரர்கள் முறையிடும் அனைத்து ஆட்சேபணைகள் / சவால்களை கருத்தில் கொண்டு தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம் (TNFUSRC) இறுதி விடைகளை வெளியிடும் மற்றும் தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தின் இணையவழித் தேர்விற்கான இறுதி முடிவு அறிவிக்கப்படும்.

8. தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் இறுதி விடைகள் அறிவிக்கப்பட்ட பின்னர், எந்தவொரு சவால்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள் (விடைச்சவாலின்படி) தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் "மூல மதிப்பெண்களாக" கருதப்படும். தகவல் சிற்றேடு பத்தி எண்.17(a) –ன்படி நியாயமான மற்றும் கட்டாயமான இயல்பாக்கல் நடைமுறையினால் மதிப்பெண்கள் அதிகரிக்கலாம் / குறையலாம்/ மாறாமல் இருக்கலாம்.

10. இயல்பாக்கல் நடைமுறைக்குப் பின் விண்ணப்பதாரர்களால் பெறும் மதிப்பெண் "**இறுதி மதிப்பெண்**" ஆகும்.

11. இது தொடர்பாக தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தின் முடிவே **இறுதியானதாகும்.**

12. **எச்சரிக்கை:** விண்ணப்பதாரர்கள் பதில்தாள்களை அச்சு எடுக்கவோ பிரதி உண்டாக்கவோ கூடாது என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பதில்தாளானது தமிழ்நாடு வனத்துறையின் அறிவுசார் சொத்துரிமை ஆகும். இதனை எவரேனும் மீறும்போது தீவிரமாக பார்க்கப்பட்டு இந்த குற்றத்திற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

| |
|---|
| குறிப்பு: விண்ணப்பதாரர்கள் www.forests.tn.gov.in இணையதளத்தில் உள்ள **"கேள்வி மற்றும் விடை சவால் – எதிர்பார்க்கப்படும் கேள்விகள்"** அறிவிப்பை கவனமாக படிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். |

தேதி: 14.10.2019

உறுப்பினர், தநாவசீபதேகு.